தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

25.02.2013 A.M

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 34 அடி

மேட்டூர் அணையின் நீர் மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 34 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,319 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 601 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## "முதல் முறையாக அதிக அளவில் வறட்சி நிவாரணம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதல் முறையாக அதிக நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது என்றார் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம்.

தஞ்சாவூரில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட காவிரி சிறப்புக் கூடுதல் நிவாரணம் மற்றும் வறட்சி நிவாரணத் தொகை வழங்கும் பணி தொடக்க விழாவில் அவர் பேசியது:

பருவமழை பொய்த்ததாலும், இடர்பாட்டுக் காலத்தில் காவிரியில் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய தண்ணீரை கர்நாடகம் தர மறுத்ததாலும் டெல்டா மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டது.

தமிழக முதல்வரின் உத்தரவுப்படி உயர்நிலைக் குழு ஆய்வு செய்தது. இதைத்தொடர்ந்து, 50 %-க்கு மேல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15,000 என தமிழக முதல்வர் அறிவித்தார்.

வறட்சி நிவாரணம் இவ்வளவு அதிகமாக வழங்குவது இதுவே முதல் முறை. மேலும், காப்பீட்டுத் தொகையான ரூ.8,600 வருவதற்கு முன்பே அதையும் சேர்த்து ரூ.15,000-ஆக வழங்கப்படுகிறது. இந்த நிவாரணம் உண்மையிலேயே 50%க்கும் அதிகமாக பயிர் பாதிப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இதில், கட்சி பாகுபாடு, சொந்த விருப்பு வெறுப்பு

எதுவும் இல்லை. எனது தொகுதிக்கு உள்பட்ட ஒரத்தநாடு வட்டத்தில் ஐம்பது சதத்துக்கு கீழ்தான் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. காப்பீட்டு நிறுவன விதிமுறைப்படிதான் தமிழக முதல்வர் இந்த நிவாரண உதவியை வழங்குகிறார். இதை மனசாட்சி உள்ளவர்கள், நியாயமானவர்கள் ஏற்றுக் கொள்வர் என்றார் வைத்திலிங்கம்.

மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் பேசியது: இந்த நிவாரணம் முதல் கட்டமாக 50 %-க்கும் அதிகமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது. அடுத்த கட்டஅறிவிப்புகள் வரும் என்றார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரெங்கசாமி, எம். ரெத்தினசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நெல் கொள்முதல் நிலைய குறைபாடுகளைக் களைய வேண்டும்'

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உள்ள குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஏஐடியுசி தொழிலாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலர் சி. சந்திரகுமார் தெரிவித்திருப்பது:

கொள்முதல் பணியாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள் மீது பெரும் சுமை சுமத்தப்படுகிறது. கொள்முதல் நிலையங்களைத் தொடங்கும்போது கொள்முதலுக்குத் தேவையான பொருள்களைச் தொழிலாளர்கள் தங்களது சொந்த பொறுப்பில் ஆயிரக் கணக்கில் செலவிட்டு எடுத்துச் செல்ல வேண்டிய நடைமுறை உள்ளது. கொள்முதல் செய்து சேமிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படும்போது இருப்பு இருந்த காரணத்தால் பல ஆயிரக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்புகளை சொற்ப ஊதியம் பெறும் கொள்முதல் பணியாளர்களிடம் சிறிதும் நியாயமற்ற முறையில் விசாரணை ஏதுமின்றி கட்டாயப்படுத்தி வசூலிக்கப்படுகிறது. சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு எடை போட்டு தைத்து, அட்டியில் அடுக்கி, பின்னர் லாரி வரும்போது ஏற்றுவதற்கு மூட்டை ஒன்றுக்கு நிர்வாகத்தால் ரூ. 1.87 வழங்கப்படுகிறது. இதே பணிக்கு தனியாரிடம் மூட்டைக்கு ரூ.10 கூலி கிடைக்கிறது.

நெல் கொள்முதல் தொடங்குவதற்கு முன்பே குறைகளைக் களைவதற்கான ஆலோசனைகளை தெரிவிக்க அனுமதி கேட்ட எங்களது கடிதத்துக்கு நிர்வாகத்திடமிருந்து எந்த பதிலும் இல்லை.

நிர்வாகத் தரப்பில் இதுபோன்ற ஆலோசனைகளைக் கேட்டு பரிசீலிப்பதற்கோ, கொள்முதலில் குறைகளைக் களைந்து மேம்படுத்துவதற்கோ ஆர்வமில்லாத நிலை உள்ளது. இப்போதைய உலகமய, தனியார்மய சூழலில் நெல் கொள்முதலையும், பொது விநியோக முறையையும் பாதுகாக்க தமிழக முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் சந்திரகுமார்.

## புதுகை காவிரி டெல்டா பாசனப் பகுதியில் 19,780 ஏக்கர் பரப்பளவு சேதம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காவிரி டெல்டா பாசனப்பகுதி 19,780 ஏக்கர் பரப்பு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார் தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ந. சுப்பிரமணியன்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், குளத்தூநாயக்கர்பட்டி ஊராட்சியில் மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தலைமையில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் விராலிமலை சி. விஜயபாஸ்கர், புதுக்கோட்டை வி.ஆர். கார்த்திக்தொண்டைமான் ஆகியோர் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், பங்கேற்று 262 விவசாயிகளுக்கு ரூ.24.46 லட்சம் நிவாரண நிதி உதவிகளை வழங்கி மேலும் அவர் பேசியது:

காவிரி நீர் கிடைக்காததால் பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு நிவாரண நிதி உதவிகளை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரை 19,780 ஏக்கர் 50 சதவிகிதத்துக்கு மேல் பயிர் பாதிக்கப்பட்ட பரப்பு உள்ளதாக கணக்கெடுக்கப்பட்டு அதனடிப்படையில் 129 கிராமங்களில் உள்ள 19, 600 நபர்களுக்கு நிவாரண உதவித்தொகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் டெல்டா விவசாயிகளுக்கு கிடைக்கக் கூடிய சலுகைகளான இன்சூரன்ஸ், மும்முனை மின் விநியோகம் உள்ளிட்டவைகளை புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கும் கிடைக்க வேண்டுமென தெரிவித்திருந்தோம். அதை பரிசீலிப்பதாக முதல்வர் தெரிவித்துள்ளார்.

எனவே, முதல் கட்டமாக அரசுத் துறைகளின் மூலம் இழப்பீடு கணக்கெடுக்கப்பட்டு தற்போது கந்தர்வக்கோட்டை வட்டம், குளத்தூநாயக்கர்பட்டி கிராமத்தில் பயிர்களை இழந்த 262 விவசாயிகளின் 163.09 ஏக்கர்பரப்புக்கு ரூ.24.46 லட்சம் நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது.

உதவித்தொகை கிடைக்காத விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

காவிரி பிரச்சினையில் தமிழத முதல்வர் பல்வேறு தொடர் போராட்டங்களில் ஈடுபட்டதன் விளைவாக காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

இதில், மாவட்ட வருவாய் அலுவலர் க. நாகராசன், கோட்டாட்சியர் சி. முத்துமாரி, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் கே.வி.எஸ். குமார், ஒன்றியக்குழுத்தலைவர் காட்டுநாவல் சின்னப்பா, உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 24,592 விவசாயிகளுக்கு ரூ. 33.70 கோடி வறட்சி நிவாரணம்

திருச்சி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 24,592 விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15,000 வீதம் 21,794 ஏக்கருக்கு ரூ.33,70 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட உள்ளது என்றார் மாநில அமைச்சர் என்.ஆர். சிவபதி.

திருச்சி மாவட்டம், சோமரசம்பேட்டை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விழாவில், 65 விவசாயிகளுக்கு ரூ.8.59 லட்சம் நிவாரணத் தொகையை வழங்கி, அவர் மேலும் பேசியது:

கர்நாடகத்திடமிருந்து தமிழகத்துக்குரிய தண்ணீரை பெற்றுத் தர மத்திய அரசு தவறியநேரத்திலும், தமிழகத்தில் விவசாயிகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிட்டவர் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

31 ஆண்டுகால அரசியல் போராட்டத்துக்கு இடையே, தமிழகத்தின் நீராதார பிரச்னையான காவிரி பிரச்னையில், நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட நடவடிக்கை மேற்கொண்டவர் முதல்வர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் இந்த நிவாரணத் தொகை வரவு வைக்கப்படும் என்றார் அமைச்சர் சிவபதி. விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமை வகித்தார். சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். மனோகரன்,துணை மேயர் ஆசிக் மீரா, ஒன்றியக் குழுத் தலைவர் முத்துக்கருப்பன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ராஜேந்திர பிரசாத் உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர்.

## மேட்டூருக்கு நீர்வரத்து குறைந்தது

கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்தது.

உச்ச நீதிமன்ற உத்தரவையடுத்து, கடந்த 9-ஆம் தேதி கர்நாடக மாநிலம், கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்டது. இதையடுத்து, காவிரியில் வினாடிக்கு சுமார் 4 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வந்தது. இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் 4.26 அடி உயர்ந்தது.

இந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை வினாடிக்கு 4,154 கன அடியாக இருந்த

நீர்வரத்து வெள்ளிக்கிழமை காலை 3,483 கன அடியாகவும், சனிக்கிழமை 2,419 கன அடியாக குறைந்தது.

கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீர் திறப்பதை கர்நாடக அரசு நிறுத்தியதே, நீர்வரத்து குறைவுக்கு காரணம் என பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது அணையில் உள்ள 9.13 டிஎம்சி நீரைப் பயன்படுத்தியே, கோடைகாலத்தில் ஏற்படும் குடிநீர், பாசனத் தேவையைச் சமாளிக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

## 50 சதவீத மானிய விலையில் காய்கறி விதைகள்

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 50 சதவீத மானிய விலையில் வீரிய ரக காய்கறி விதைகளானதக்காளி, வெண்டை, பாகல், பீட்ரூட் விதைகள் தோட்டக்கலை துறை மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கம்ப்யூட்டர் சிட்டா நகல், ரேஷன்கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ ஆகியவற்றுடன் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயனடையுமாறு, பல்லடம் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கே.எஸ்.சுகந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## விதை கிராம திட்டப் பயிற்சி முகாம்

கும்மிடிப்பூண்டியை அடுத்த பாதிரிவேட்டில் வேளாண்மை துறை சார்பாக விதை கிராம திட்டப் பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் நாகபூஷணம் முனுசாமி தலைமை வகித்தார். விதை ஆய்வாளர் சங்கர், துணை வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன், மாதர்பாக்கம் உதவி வேளாண்மை அலுவலர் சிவசங்கரி உள்ளிட்டோர் இந்த பயிற்சியளித்தனர். இதில் பங்கேற்ற விவசாயிகளுக்கு உயிரி உரங்கள் மற்றும் சொட்டு நீர் தெளிப்பான் ஆகியவற்றை வேளாண்மை துறை சார்பாக வழங்கப்பட்டன.

## கோழி வளர்ப்புக் கருத்தரங்கம்

கள்ளக்குறிச்சி அருகே உள்ள மன்மலை கிராமத்தில் கால்நடை மருத்துவ பல்லகலைக்கழகம் மற்றும் பராமரிப்புத்துறை சார்பில் கோழி வளர்ப்பு கருத்தரங்கம் மற்றும் கோழிக்குஞ்சுகள் வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்தார்.

ஒன்றியக்குழு தலைவர் அ.ராஜசேகர், திட்ட அலுவலர் க.முத்துமீனாள், கோட்டாட்சியர் சி.ராஜசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் எஸ்.ராஜேசகரன் வரவேற்றார்.

ஊரக தொழில்துறை அமைச்சர் ப.மோகன் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து கோழிக்குஞ்சுகளை இரு நபர்களுக்கு வழங்கினார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி மைய இயக்குனர் சி.சந்திரஹாசன்,

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர்கள் ஆர்.மதிவாணன், பி.வாசன், நா.வேங்கடபதி, உதவிப் பேராசிரியர்கள் மு.பழனிவேல், ஆர்.ரவிக்குமார் உள்ளிட்டோர் பேசினர்.

ஒன்றியக்குழு துணைத் தலைவர் மு.கண்ணன், ஒன்றியக்குழு தலைவர்கள் ப.ராஜேந்திரன், எஸ்.அரசு, மாவட்டக் கவுன்சிலர் டி.ராயப்பன், க.மணி, வட்டார வளர்ச்சி அலுவலர் ஆ.ராஜசேகர், கால்நடை மருத்துவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கால்நடை உதவி மருத்துவர் கே.எஸ்.கோபி நன்றி கூறினார்.

## சீரகம் ஏற்றுமதியில் இந்தியா சாதனை படைக்கும்



மும்பை:நடப்பு 2012-13ம் நிதியாண்டில், சீரகம் ஏற்றுமதியில் இந்தியா, புதிய சாதனை படைக்க உள்ளது. தற்போது, நிர்ணயித்த இலக்கை விஞ்சி, சீரகம் ஏற்றுமதி நடைபெற்று வருகிறது.இந்திய சமையலில், முக்கிய அங்கம் வகிக்கும் சீரகம், குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் அதிகம் விளைகிறது. இந்திய சீரகத்திற்கு, உலக நாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது.

உலக நிலவரம்:சர்வதேச சீரகச் சந்தையில், சிரியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் பங்களிப்பு தான் அதிக அளவில் இருந்தது. இந்நிலையில், சிரியாவின் உள்நாட்டு கலவரமும், துருக்கியில் நிலவும் ஸ்திரமற்ற அரசியல் சூழலும், அந்நாடுகளின் சீரக ஏற்று மதியை பெரிதும் பாதித்துள்ளன. உலக வேளாண் பொருட்கள் சந்தையில், இந்நாடுகளின் சீரகம் அளிப்பு குறைந்துள்ளது. இந்த இடைவெளியை இந்தியா சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு, அதிக அளவில் சீரகத்தை ஏற்றுமதி செய்து வருகிறது.

புதிய வரத்து:இந்திய நறுமண பொருள்கள் வாரியம், நடப்பு நிதியாண்டில், 45 ஆயிரம் டன், சீரகம் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தது.ஆனால், நடப்பு நிதியாண்டு முடிய இன்னும் 40 நாட்கள் உள்ள நிலையில், சீரகம் ஏற்றுமதி, இலக்கு அளவான, 45 ஆயிரம் டன்னை எட்டி விட்டது. தற்போது, அறுவடை செய்யப் பட்ட புதிய சீரகம் சந்தைக்கு வரத் துவங்கி உள்ளதால், வரும் மார்ச் இறுதிக்குள் மேலும், 15 ஆயிரம் டன் சீரகம் ஏற்றுமதி ஆகும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.

இதையடுத்து, நடப்பு நிதிஆண்டில், நாட்டின் சீரகம் ஏற்றுமதி, 60 ஆயிரம் டன் என்ற புதிய உச்சத்தை எட்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச சந்தையில், இந்திய சீரகம், டன் ஒன்று 3,000 டாலர் (1.65 லட்ச ரூபாய்) என்ற அளவில் விலை போய்க் கொண்டுள்ளது. இந்தியாவின் சீரக ஏற்றுமதி, ஆண்டுக்கணக்கில், 30 சதவீத வளர்ச்சியை கண்டு வருகிறது.
உற்பத்தி:அதற்கேற்ப, சீரகம் உற்பத்தியும் உயர்ந்து வருகிறது. இதைஅடுத்து, உள்நாட்டிலும், சீரகம் சப்ளை சீராக உள்ளது. சென்ற நிதியாண்டு, நாட்டின் சீரகம் உற்பத்தி, 40 லட்சம் மூட்டைகள் (ஒரு மூட்டை-55 கிலோ) என்ற அளவில் இருந்தது.
இதை விட, நடப்பு நிதியாண்டில், சீரகம் உற்பத்தி அதிகம் இருக்கும் என, மதிப்பிடப்பட்டிருந்தது.இந்நிலையில், ராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்களில், சில பகுதிகளில் பெய்த மழையால், சீரகம் உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால், சென்ற நிதியாண்டைப் போன்றே, நடப்பு நிதியாண்டிலும், அதே அளவில் சீரகம் உற்பத்தி இருக்கும் என, மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
உள்நாட்டு சந்தையில், தற்போது சீரகம் வரத்து, நாளொன்றுக்கு, 4,000 மூட்டைகள் என்ற அளவில் உள்ளது. தற்போது புதிய பயிர் அறுவடை நடைபெற்று வருவதால், சந்தையில் சீரகம் வரத்து 15 ஆயிரம் மூட்டைகளாக உயர வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.
அதே சமயம், சீரகம் வரத்து அதிகரித்துள்ளதால், அதன் விலை சரிவடைந்து வருகிறது. முன்பேரச் சந்தையில், தின வர்த்தகத்தில் சீரகம் விலை, கடந்த இரண்டு மாதங்களில், 10 சதவீதம் சரிவடைந்துள்ளது. புதிய வரத்து அதிகரிக்கும்பட்சத்தில், ஒரு கிலோ சீரகம் விலை, 133 ரூபாயில் இருந்து, 125 ரூபாய் வரை குறைய வாய்ப்பு உள்ளதாக, வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

## திராட்சை ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்பு



புதுடில்லி:இந்திய திராட்சைக்கு, ஐரோப்பிய நாடுகளில், அதிக தேவை காணப்படுவதால், நடப்பாண்டில், இதன் ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என,"அபெடா' அமைப்பு தெரிவித்துள்ளது.உள்நாட்டில், மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில், திராட்சை அதிக

அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.இந்திய திராட்சை ஏற்றுமதிக்கு, ஐரோப்பிய நாடுகள், வங்கதேசம், நேபாளம், இங்கிலாந்து, ”வீடன், நெதர்லாந்து ஆகிய நாடுகள் முக்கிய சந்தைகளாகத் திகழ்கின்றன.கடந்த 2010-11ம் ஆண்டில், 602 கோடி ரூபாய் மதிப்பிலான, 1.08 லட்சம் டன் திராட்சை ஏற்றுமதி செய்யப்பட்டது.

நடப்பாண்டில், இதுவரையிலுமாக, திராட்சை ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 3,755 டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டின், இதே காலத்தில், 1,906 டன் என்ற அளவில் இருந்தது.நடப்பாண்டில், இதுவரையிலுமாக, நெதர்லாந்து நாட்டிற்கான திராட்சை ஏற்றுமதி, 1,764 டன் என்ற அளவில் உள்ளது. இதையடுத்து, இங்கிலாந்து (1,302 டன்), சுவீடன் (508 டன்) ஆகிய நாடுகளுக்கு திராட்சை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில், ஏற்றுமதிக்கான ஒரு கிலோ திராட்சையின் விலை, 40 - 45 ரூபாய் என்ற அளவில் இருந்தது. நடப்பாண்டில், இதன் விலை கிலோவுக்கு, 15-20 ரூபாய் வரை அதிகமாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## பருவம் தவறிய மழையால்...உருளைக்கிழங்கு உற்பத்தி பாதிப்பு



பருவம் தவறி பெய்த மழையால், நாட்டின் உருளைக்கிழங்கு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், வரும் மாதங்களில் உருளைக்கிழங்கு விலை உயரும் என, தெரிகிறது.உத்தர பிரதேசம், அரியானா, மேற்கு வங்கம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள், உருளைக்கிழங்கு உற்பத்தியில் முன்னணியில் உள்ளன.

அறுவடை:இம்மாநிலங்களில், குளிர் காலத்தை தொடர்ந்து, திடீரென்று, 20 நாட்கள் இடைவிடாமல் மழை பெய்தது. பருவம் தவறி பெய்த மழையால், விளைந்த உருளைக்கிழங்கை விவசாயிகள் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.மேலும், மழை காரணமாக, பல இடங்களில் பயிர் நிலத்தை, அளவிற்கதிகமாக மண் மூடியுள்ளது. இதனால், உருளைக் கிழங்கு பயிர் நிலையிலேயே அழுகி உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த பாதிப்பு காரணமாக, உருளைக் கிழங்கு உற்பத்தி குறைந்துள்ளது. சந்தையில் உருளையின்

வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை உயர்ந்து வருகிறது.உத்தர பிரதேச மாநிலம், அலிகார் சந்தையில், சென்ற 18ம் தேதி வரையிலான ஒரு வார காலத்தில், ஒரு குவிண்டால் உருளைக் கிழக்கு விலை, 90 ரூபாய் அதிகரித்து, 610 ரூபாயாக உயர்ந்துள்ளது.

கர்நாடகா:இதே காலத்தில், டில்லியில், ஒரு குவிண்டால் உருளைக்கிழங்கு விலை, 636 ரூபாயில் இருந்து, 683 ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, கர்நாடக மாநிலம், ஹூப்ளியில், 1,000 ரூபாயில் இருந்து, 1,400 ரூபாயாகவும், கோல்கட்டாவில், 610லிருந்து, 700 ரூபாயாகவும், நாசிக்கில், 800லிருந்து, 875 ரூபாயாகவும், புனேயில், 1,050லிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இந்நிலையில், உருளை விளையும் மாநிலங்களில், மீண்டும் மழை பெய்யும் என, மத்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இதனால், நடப்பு பிப்ரவரி இறுதியில் தான், உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஏற்பட்ட பாதிப்பு குறித்து தெரிய வரும் என, மத்திய உருளைக்கிழங்கு ஆய்வு மைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.உருளைக்கிழங்கு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், வரும் கோடையில், அதன் வரத்து குறைந்து, விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

## வறட்சி நிவாரண நிதி விவசாயிக்கு வழங்கல்

அரியலூர்: அரியலூர் மாவட்ட விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க, தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்கும் விழா, திருமானூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நேற்று நடந்தது.

விழாவுக்கு அரியலூர் கலெக்டர் செந்தில்குமார் தலைமை வகித்தார். கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவாஜி வரவேற்றார். எம்.பி., இளவரசன் முன்னிலையில் நடந்த விழாவில், அரியலூர் மாவட்டத்தில் உள்ள, 41 கிராமங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள, 12 ஆயிரத்து, 836 விவசாயிகளுக்கு, 28 கோடியே, 60 லட்சத்து, 95 ஆயிரத்து, 810 ரூபாய் நிவாரணம் வழங்கும் நடவடிக்கையை, அரியலூர் கலெக்டர் செந்தில்குமார் துவக்கி வைத்தார்.

மேற்கண்ட வறட்சி நிவாரண தொகை, சம்பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அவர்களுக்கு நேரடியாக செலுத்தப்பட்டு விடும் என, கலெக்டர் கூறினார்.

## கோடைகால தர்பூசணி விற்பனை "ஜோர்' விளைச்சல் குறைவால் விலை "விர்ர்'

கரூர்: கோடை வெப்பத்தை தணிக்கும் தர்பூசணி விற்பனை, கரூரில் ஜோராக நடந்து வருகிறது. விளைச்சல் குறைவால் அதன் விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் குறைந்த மழையளவு பெறும் ஒரு சில மாவட்டங்களில், கரூர் மாவட்டமும் ஒன்று.

கடந்தாண்டு சராசரி மழையளவை விட, மிகவும் குறைவாகதான் மாவட்டத்தில் மழை பெய்தது. இப்பகுதிகளில் சில நாட்களாகவே வெயில் கடுமையாக காணப்படுகிறது. வெயிலின் உஷ்ணத்தை தணிக்க, இளநீர், மோர், குளிர்பானம், கரும்புசாறு, வெள்ளரிப்பிஞ்சு, தர்பூசணி, சாத்துக்குடி ஜூஸ் போன்றவற்றை மக்கள் பருகின்றனர். தாகத்தை போக்கும் பழங்களில் முதன்மையானதாக தர்பூசணி உள்ளது.

இவை விழுப்புரம், திண்டிவனம், புதுச்சேரி பகுதிகளில் அதிகளவில் விளைவிக்கப்படுகின்றன. கரூர் பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள், அங்கிருந்து தர்பூசணியை வாங்கி வந்து விற்பனை செய்து வருகின்றனர். கடந்தாண்டு, ஒரு கிலோ, பத்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட தர்பூசணி, தற்போது இன்னும் கோடை சீஸன் முழுமையாக துவங்காத நிலையில், ஒரு கிலோ, 15 ரூபாயலிருந்து, 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

கரூரில், திருச்சி பைபாஸ் சாலை, சுங்ககேட், தாந்தோணிமலை, வெங்கமேடு, திருக்காம்புலியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தர்பூசணி பழங்கள் படுஜோராக விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது:

மூன்று மாதத்தில் நல்ல பலனை கொடுப்பதால், விவசாயிகள் தர்பூசணியை ஆர்வத்துடன் பயிரிட்டு வருகின்றனர். ஆனால் வறட்சி காரணமாக விளைச்சல் இந்த ஆண்டு குறைந்துள்ளது. ஆகையால் தர்பூசணி வரத்தும் குறைந்து, கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு தர்பூசணி விலை அதிகரித்துள்ளது. வாடிக்கையாளர் விருப்பத்தின் ஏற்ப, சில்லறையில் ஒரு கீற்றின் விலை, 5 முதல், 10 ரூபாய் வரை விற்பனை செய்கிறோம்.

கோடையின் தாக்கம் ஏப்ரல் மாதத்தில் அதிகரிக்கும் போது, தர்பூசணி விற்பனை சூடு பிடிக்கும். அப்போது விலையும் இன்னும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. மேலும் விளைச்சல் குறைவாக உள்ளதால், உச்சகட்ட கோடை சீஸனில் தர்பூசணி கிடைக்குமா என்பதே சந்தேகமாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சூரியகாந்திக்கு விலையின்றி விவசாயிகள் தடுமாற்றம் : பயனில்லாது போகும் அமோக விளைச்சல்

கரூர்: சூரியகாந்தி விளைச்சல் அமோகமாக இருந்தும், கரூர் மாவட்ட வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில், கொள்முதல் செய்யபடவில்லை. இதனால் இடைத்தரகர்கள் மூலம், அடிமாட்டு விலைக்கு விற்பனை, சூரியகாந்தி பூக்களை விவசாயிகள் செய்து வருகின்றனர். கரூர் மாவட்டத்தில் மழை பொய்த்து போனதால், காவிரி, நொய்யல், அமராவதி ஆறுகள் வறண்டு போனது. இதனால் கண்மாய், குளங்களில் தண்ணீர் குறைந்து காணப்படுகிறது. இதையடுத்து

விவசாயிகள் குறைந்த செலவில் அதிக வருவாய் தரும், எண்ணெய் வித்து பயிரான சூரியகாந்தி சாகுபடிக்கு மாறினர். இது, 90 நாட்கள் முதல், 100 நாட்களுக்குள் பலன் தரும். மேலும் குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படும். இந்த பயிருக்கென்று தனியாக காலம் எதுவும் இல்லாததால், எப்போது வேண்டுமானாலும் பயிரிட்டு மகசூல் பெற முடியும். இதுபோன்ற சிறப்புகளை கொண்டு இருப்பதால் விவசாயிகள் சூரியகாந்தி பயிரை, வறட்சியை தாங்கும் பயிர் என கூறுகின்றனர்.

மாவட்டத்தில் குளித்தலை, கிருஷ்ணராயபுரம், லாலாப்பேட்டை, மாயனூர், புலியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், 2,500 ஹெக்டேர் நிலப்பரப்பில், சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சூரியகாந்தி விதைகள் முளைத்து, நிலத்தை விட்டு வெளியே வந்து, தற்போது பூக்கள் பூத்து, ரம்மியமாக காட்சியளிக்கிறது. ஒவ்வொரு செடியும் பூக்களுடன், ஏராளமான விதைகளுடன் முளைத்து நிற்கிறது.

சூரியகாந்தி பயிரை பொறுத்தவரை விதைத்த பின்னர் பராமரிப்பு என்பது தேவையற்றது. அதேநேரத்தில் சூரியகாந்தி பயிர் முளைத்து பூக்கள் வந்த பின், அதன் வித்துக்களில் புழுக்கள் ஏற்படாமல் பாதுகாக்க, தூய்மையான வெள்ளை துணியால் துடைத்து விட வேண்டும். தொடர்ந்து பூக்களும், விதைகளும் முதிர்ச்சியடைந்ததும், அறுவடை செய்து வித்துக்களை பிரித்து எடுக்கும் பணிகள் நடக்கும். சூரியகாந்தி பயிரை பொறுத்தவரை அதை விதையிட்டு, வளர்ந்த பின்னர் பராமரித்து, வித்துக்களை பிரித்து எடுத்து, கடைகளுக்கு கொண்டு சென்று காசாக்குவதே முக்கிய வேலை இருக்கிறது.

கரூர் மாவட்டத்தில் அமோகமாக விளைந்துள்ள சூரியகாந்தியை, தற்போது அறுவடை செய்யும் நிலையில், உரிய விலை கிடைக்க வில்லை என, விவசாயிகள் புலம்புகின்றனர். இதுகுறித்து வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

வறட்சியை தாக்குபிடிக்கும் சூரியகாந்திக்கு, 10 நாட்களுக்கு ஒரு முறை, தண்ணீர் பாய்ச்சினால் போதுமானதும். மேலும் குளிர்காலங்களில், பனிதுளியின் ஈரத்தை வைத்து, பயிர் கிடுகிடு என வளரும் தன்மை கொண்டது. மேலும் ஒரு ஹெக்டேர் பயிரிட, 15 ஆயிரம் ரூபாய் வரை மட்டும் செலவாகிறது. இதன் விளைவாக விவசாயிகள் இதனை பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர். இருப்பினும் கரூர் மாவட்டத்தில் உள்ள வேளாண் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில், சூரியகாந்தியை கொள்முதல் செய்வது கிடையாது. இதனால் வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் சென்று, விற்பனை செய்ய வேண்டி உள்ளது. அங்கு விற்பனை செய்தால் சூரியகாந்திக்கு டன்னுக்கு, 35 ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைக்கும். அங்கு சென்று விற்பனை

செய்ய விவசாயிகளுக்கு, போக்குவரத்து செலவு அதிகம் பிடிக்கும் என்பதால், இடைத்தரகர் மூலம் விற்பனை செய்கின்றனர்.

அவர்கள் டன், 25 ஆயிரம் என அடிமாட்டு விலைக்கு வாங்குகின்றனர். இதனால் விவசாயிகள் பெரிய இழப்பை சந்திக்க வேண்டி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

கடந்தாண்டை விட எண்ணெய் விலையில் தற்போது அதிக ஏற்றம் இருந்த போதும், இந்தாண்டு சூரியகாந்தி கொள்முதல் விலையில் மாற்றமில்லாதது, விவசாயிகள் இடையே ஏமாற்றத்தை அளித்து உள்ளது. இது மட்டுமல்லாது விளையும் பகுதிகள் அருகில் உள்ள வேளாண் ஒழுங்கும்முறை விற்பனை கூடங்கள் மூலம், வியாபாரிகள் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பயிரிக்கு குறைந்தபட்ச விலையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும், ஏற்கனவே விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை சமாளிக்கும் அளவுக்கு விலை அமைய வேண்டுமென்றும், விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கால்நடைகளுக்கு சிறப்பு முகாம்

பந்தலூர்: பந்தலூர் அருகே சேரங்கோடு ஊராட்சியில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

சேரங்கோடு ஊராட்சிக்கு உட்பட்ட சேரம்பாடி, கண்ணன்வயல், சப்பாந்தோடு, படைச்சேரி, கொளப்பள்ளி, அய்யன்கொல்லி, எருமாடு, அம்மன்காவு உள்ளிட்ட பகுதிகளில் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகளுக்கான சிறப்பு கால்நடை குடற்புழு நீக்க முகாம் நடந்தது.

இதில், ஏற்கனவே வழங்கப்பட்ட 380 ஆடுகள், தற்போது வழங்கப்பட்ட 585 ஆடுகள் மற்றும் அதன் குட்டிகள் 85 என மொத்தம் 1050ஆடுகள் பயன்பெற்றன.

இதேபோல், ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கிராமங்கள் தோறும் சிறப்பு கால்நடை நல மருத்துவ முகாம் நடந்தது. இதில், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் டாக்டர் சந்திரசேகரன் தலைமையில் டாக்டர்கள் பிரபு, வெள்ளியங்கிரி, சுரேஷ்குமார், காளியப்பன் ஆகியோர் சிகிச்சை அளித்தனர்.

## விவசாயிகளுக்கு விதை தயாரிப்பு பயிற்சி

வத்திராயிருப்பு: விவசாயத்துறையின் சார்பில் வத்திராயிருப்பு பகுதி விவசாயிகளுக்கு விதை தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டது.விவசாயிகள் தாங்கள் பயிரிடுவதற்கு தேவையான விதைகளை அரசையோ, தனியார் நிறுவனங்களையோ எதிர்பாராமல் சுயமாக தாங்களே தரமான விதைகளை தயாரித்துக்கொள்ள விவசாயத்துறையின் சார்பில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதையொட்டி நத்தம்பட்டியில் நடந்த துவக்க
விழாவிற்கு விருதுநகர் வேளாண்மைத்துறை துணை இயக்குனர் கனகராஜ் தலைமை வகித்தார். துணை இயக்குனர் வன்னியராஜன் முன்னிலை வகித்தார். வத்திராயிருப்பு நிலைய உதவி இயக்குனர் பாண்டித்துரை வரவேற்றார். இதில் விவசாயிகள் நெல்விதை தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டது. பருத்திச் செடிகளிலிருந்து பஞ்சை எடுக்கும் கருவிக்கான செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. இதே போல் வத்திராயிருப்பு, கான்சாபுரத்தில் நெல் விதை தயாரிக்கவும், கோட்டையூர், மகாராஜபுரம் கிராமங்களில் பயறு வகை விதைகள் தயாரிக்கவும் பயிற்சியளிக்கப்பட்டது. வேளாண்மை அலுவலர் முத்தையா நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்குவதில் குளறுபடி

வருஷநாடு: மயிலாடும்பாறை தொடக்க விவசாய கூட்டுறவுக் கடன் சங்கத்தில், விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்குவதில் குளறுபடு ஏற்பட்டு வருகிறது. மயிலாடும்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில்,மயிலாடும்பாறை,மூலக்கடை, முத்தலாம்பாறை, குமணந்தொழு,உப்புத்துறை, சோலைத்தேவன்பட்டி, நரியூத்து, தங்கம்மாள்புரம் பகுதிகளில் இருந்து பயிர் கடன் கேட்டு 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் மனுக்கொடுத்தனர். இதில் சில விவசாயிகளுக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டுள்ளது.மற்ற விவசாயிகளை தினந்தோறும் அலைக்கழித்து வருகின்றனர்.மலைக்கிராம விவசாயிகளுக்கு கடனுதவி வழங்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.சற்குணஅம்மாள் (மயிலை): எனது தோட்டத்திற்கு பயிர்கடன் கேட்டு விண்ணப்பித்து, ஆறு மாதங்களாகியும் வழங்கப்படவில்லை.தற்போது பயிர் கடன் கேட்டு சென்றால் இன்று வா?.நாளை வா?. என தினந்தோறும் அதிகாரிகள் அலைக்கழித்து வருகின்றனர்.பயிர் கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மாவட்டத்தில் வறட்சி நிலவரம் குறித்த, தகவல்களை விவசாய, தோட்டக்கலைத்துறையினர் சேகரித்து வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சரியான அளவில் மழை இல்லை. கடந்த 2012ம் ஆண்டில், வழக்கமான மழையில் 30 சதவீதம் கூட பெய்யவில்லை. இதனால் நிலத்தடி நீரும் பாதிக்கப்பட்டு,மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. தென்னை மரங்கள் வாடி, அழிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டிபட்டி பகுதியில் மா மரங்கள், புளிய மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. தோட்டக்கலை நிலங்கள் அனைத்தும் வறண்ட பூமியாகி விட்டன. நெல் அறுவடை பாதி நிலங்களில் பொய்த்துப்போனது. ஆறுகள், குளங்கள், ஏரிகள் வறண்டு விட்டன. இப்படி எல்லா வகையிலும் பாதிப்புகள் அதிகமாகி விவசாயிகள் கடன் பட்டு,வட்டி கட்ட முடியாமல் ஊரை காலி செய்து, நகரங்களை நோக்கி கட்டட வேலைக்கும், ஓட்டல் கூலி வேலைக்கும் செல்ல தொடங்கி உள்ளனர். இந்நிலையில், வறட்சி பாதிப்பு நிலைமை குறித்து கணக்கெடுத்து அனுப்புமாறு விவசாய, தோட்டக்கலைத்துறைகளுக்கு அரசு அறிவுறுத்தி உள்ளது. தற்போது கணக்கெடுப்பு பணிகள் நடந்து வருகின்றன. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து, விவசாய, தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் தெரிவிக்கலாம்.

## நுண்ணுயிர் உயிர் தொழில் நுட்பவியல் கருத்தரங்கு

திண்டுக்கல்: திண்டுக்கல் எம்.வி. எம்., அரசு மகளிர் கல்லூரி சார்பில், "நுண்ணுயிர் உயிர் தொழில் நுட்பவியல்' என்ற தலைப்பில் மாநில அளவிலான கருத்தரங்கம் நடந்தது. விலங்கியல்துறை தலைவர் பேராசிரியர் பவானி வரவேற்றார். கல்லூரி முதல்வர் பத்மலதா தலைமை வகித்தார். பேராசிரியர்கள் ஹேமலதா, அனுசியா, சண்முகப்பிரியா, ஜோதிமணி, பாப்பம்மாள் பங்கேற்றனர். பேராசிரியர் முருகப்பன் பேசுகையில்; கடல்சார் உயிரினங்கள் பற்றிய ஆய்வுகளுக்கு மத்திய அரசின் பல்கலைக்கழக நிதியுதவிக் குழு, தமிழ்நாடு அரசு உயர்கல்வி மன்றம் நிதியுதவி செய்து ஊக்குவிக்கிறது. மாணவ மாணவியர் வேலைவாய்ப்பை தேடி அலையாமல் இந்த நிதியுதவியுடன் ஆய்வுத்திட்டம் மேற்கொண்டு தங்களை ஒரு தொழில் முனைவோராக மாற்றிக் கொள்ள வேண்டும், என்றார். நுண்ணுயிர் களின் வகைகள், வளர்ப்பு முறைகள், தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. பேராசிரியர் வகிதா நன்றி கூறினார். எம்.வி.எம்., அரசு கல்லூரி, ஜி.டி.என்., கல்லூரி, மதுரை தியாகராஜர் கல்லூரி, வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, திருச்சி புத்தனாம்பட்டி நேரு நினைவு கல்லூரி, பழனியாண்டவர் ஆண்கள் மற்றும் பெண்கள் கல்லூரி, மாணவர்கள் பங்கேற்றனர்..

## வேளாண் அதிகாரி ஆய்வு

பழநி: திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார் பழநி வட்டாரத்தில் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள திருந்திய நெல் சாகுபடி செய்து இடங்களில் களஆய்வு செய்தார். மாவட்ட துணை வேளாண் இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, வட்டார வேளாண் அலுவலர் கணேசன், துணை வேளாண்மை அலுவலர் துரைச்சாமி, உதவி வேளாண் அலுவலர் ராஜாசேட், உடனிருந்தனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

25.02.2013 A.M

## அரிசி விலை கிடுகிடு உயர்வு டீலக்ஸ் பொன்னி கிலோ ரூ.50



காரைக்குடி : புதுவயல் அரிசி ஆலைகளுக்கு நெல் வரத்து குறைந்துள்ளதால், வெளிமார்க்கெட்டுகளில் அரிசி விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. டீலக்ஸ் பொன்னி கிலோ ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே புதுவயல் பகுதியில் 100க்கும் மேற்பட்ட நவீன அரிசி ஆலைகள் உள்ளன. தஞ்சை, திருவாடானை, புதுக்கோட்டை, அறந்தாங்கி, சென்னை உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து இந்த ஆலைகளுக்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் அரவைக்காக கொண்டு வரப்படுகின்றன. இங்கு தினமும் ஆயிரம் டன் வரை அரிசி உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கும்,

வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. மழை இல்லாமல் விவசாயம் பொய்த்ததால், கடந்த சில வாரங்களாக புதுவயல் ஆலைகளுக்கு நெல் வரத்து குறைந்தது. டீலக்ஸ் ரக நெல் மட்டுமே தற்போது வருகிறது. இதனால், ஆலைகளிலேயே அரிசி விலை கிலோவுக்கு ரூ.4 முதல் ரூ.6 வரை உயர்ந்துள்ளது. டீலக்ஸ் பொன்னி கிலோ ரூ.42க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதே அரிசி, வெளிமார்க்கெட்டில் கிலோ ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. மற்ற ரகங்களின் விலையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால், ரேஷனில் வழங்கப்படும் இலவச அரிசி, வெளிமார்க்கெட்டுக்கு வந்து கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது.

வெளிமார்க்கெட்டில் அரிசி விலை (கிலோ) நிலவரம்:  கர்நாடகா பொன்னி, ரூ.45, மணச்சநல்லுர்ீ பொன்னி,ரூ.45.50, டீலக்ஸ் பொன்னி,ரூ.50, டீலக்ஸ்(பழையது),ரூ.55, பொங்கல் பொன்னி,ரூ.45, சிஆர் இட்லி அரிசி,ரூ.35. சிஆர் இட்லி(புழுங்கல்),ரூ.35, பொங்கல் பச்சை,ரூ.40, சில்கி பச்சை,ரூ.40, சீரக சம்பா,ரூ.66, சிஆர் பச்சை,ரூ.36.

காரைக்குடி நுகர்வோர் அமைப்பு நிர்வாகி ரமேஷ் கூறுகையில், “ஆலைகளில் அரிசி விலை கூடினால், வெளி மார்க்கெட்டில் வியாபாரிகள் மேலும் அதிக விலைக்கு விற்கின்றனர். அதன் பின், ஆலைகளில் அரிசி விலை குறைந்தாலும், அவர்கள் விலையை குறைப்பதில்லை. இதனால் நடுத்தர மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். வெளி மார்க்கெட்டில் அரிசி விலையை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என்றார்.

## முட்டை விலை 384 காசாக உயர்ந்தது



நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 384 காசாக உயர்ந்துள்ளது. நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த 4 நாட்களாக தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக் குழு நேற்று முட்டையின் பண்ணை கொள்முதல் விலையில் 2 காசு உயர்த்தியுள்ளது.

ஏற்கனவே ஒரு முட்டையின் விலை 382 காசுகள் என்றிருந்ததை, 2 காசு உயர்த்தி 384 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதே போல், ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.50 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.72 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை தேவை அதிகரிப்பு, மற்ற மண்டலங்களில் விலை உயர்வு போன்ற காரணங்களால் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில்லரை விற்பனையில் ஒரு முட்டை ரூ.4.20 வரை விற்கப்படுகிறது.

## அடுத்த மூன்று ஆண்டுகள் வரை சர்க்கரை ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் குறைவு

மும்பை

அடுத்த மூன்று ஆண்டுகள் வரை சர்க்கரை ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் குறைவு என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியா 2–வது இடம்

சர்வதேச அளவில் சர்க்கரை உற்பத்தியில் பிரேசில் நாடு முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. எனினும், சர்க்கரை பயன்பாட்டில் நம் நாடு முதலிடத்தில் இருந்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக நம் நாட்டிலிருந்து சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டதால், உலக சந்தையில் சப்ளை அதிகரித்து விலை குறைந்து வந்தது.

மேலும், உலக அளவில் 80 லட்சம் டன் சர்க்கரை கையிருப்பு இருப்பதால் தற்போது கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சர்க்கரை விலை குறைந்துள்ளது. ஆனால் இந்த நிலை நீடிக்கும் என எதிர்பார்க்க இயலாது. ஏனென்றால் இந்தியா சர்க்கரை ஏற்றுமதியை நிறுத்தும் பட்சத்தில் உலக சந்தையில் விலை அதிகரிக்க தொடங்கி விடும்.

சர்வதேச சர்க்கரை சந்தையை பொறுத்தவரை இந்தியாவின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. பருவநிலை நிலவரங்களால் ஒரு ஆண்டில் நம் நாடு சர்க்கரை இறக்குமதியாளராக உருவெடுக்கிறது. ஆனால் மற்றொரு ஆண்டில் ஏற்றுமதியாளராக மாறுகிறது. இந்தியா ஏற்றுமதியாளராக மாறும்போது உலக சந்தையில் சர்க்கரை விலை வீழ்ச்சியடைகிறது. அதே சமயம் இறக்குமதியாளராக மாறினால் விலை உயர்ந்து விடுகிறது.

நம் நாட்டில் சர்க்கரை பருவம் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரையிலான ஓர் ஆண்டு ஆகும். கடந்த 2008–09, 2009–10 பருவங்களில் நாம் அதிக அளவில் சர்க்கரை இறக்குமதி செய்ததால் உலக சந்தையில் சர்க்கரை விலை ஏறக்குறைய மூன்று மடங்கு உயர்ந்தது. ஆனால்

அதற்கு பின் வந்த பருவங்களில், இந்தியா ஏற்றுமதி செய்ய தொடங்கியதால் சர்க்கரை விலை 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சரிவடைந்தது.

<u>மதிப்பீடுகள்</u>

உள்நாட்டில் சர்க்கரை உற்பத்தி பற்றிய மதிப்பீடுகள் திருப்திகரமாக இல்லை. 2013 செப்டம்பர் மாதத்துடன் நிறைவடையும் பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 7 சதவீதம் குறைந்து 2.43 கோடி டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் பயன்பாடு 2.30 கோடி டன் அளவில்தான் இருந்து வருகிறது. எனினும் இப்பருவத்தில் நம் நாடு 15 லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி செய்ய வாய்ப்புள்ளது என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. இறக்குமதி வரி உயர்த்தப்படவில்லையென்றால் அடுத்த பருவத்திலும் (2013–14) சர்க்கரை இறக்குமதி கணிசமாக அதிகரிக்கும் என வர்த்தகர்கள் கூறினர்.

## கர்நாடகா திறந்துவிட்ட தண்ணீர் அளவு குறைக்கப்பட்டதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

மேட்டூர்

கர்நாடகா அரசு கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து திறந்துவிட்ட தண்ணீரின் அளவு குறைந்ததால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்துள்ளது.

<u>கோர்ட்டு உத்தரவு</u>

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி, கர்நாடக மாநிலம் கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் கடந்த 15–ந்தேதி மேட்டூர் அணையை வந்து அடைந்தது. இதன் காரணமாக அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து அதிகபட்சமாக வினாடிக்கு 4 ஆயிரத்து 700 கன அடி வரை தண்ணீர் வந்தது.இந்த நிலையில் கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதன் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவும் படிப்படியாக குறைந்து வருகிறது. அதாவது கடந்த 2 தினங்களுக்கு முன்பு அணைக்கு வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் வந்து கொண்டு இருந்த தண்ணீர் நேற்று மாலை வினாடிக்கு ஆயிரத்து 500 கன அடியாக குறைந்துள்ளது.

<u>நீர்வரத்து குறைந்தது</u>

இந்த நீர்வரத்து மேலும் குறைந்தால் கடந்த சில நாட்களாக அதிகரித்து வந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் மீண்டும் குறையத்தொடங்கும்.நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 33.96 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு ஆயிரத்து 575 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 600 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

## மாற்று மேலாண்மை திறன் மேம்பாட்டு பயிற்சி

தூத்துக்குடியில் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் வேளாண்மைத்துறை சார்பில் விரிவாக்க அலுவலர்களுக்கான மாற்று மேலாண்மை திறன் மேம்பாட்டு பயிற்சி தூத்துக்குடியில் நடந்தது. பயிற்சிக்கு வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) பொன்காத்த பெருமாள் தலைமை தாங்கினார். வேளாண்மை துணை இயக்குனர் குருமூர்த்தி வரவேற்று பேசினார். பயிற்சியின் நோக்கம் குறித்து புதுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் பூவண்ணன் பேசினார். சென்னை மேலாண்மைக்கான சிறப்பு தகுதிமைய பயிற்றுனர்கள் கார்முகிலன், நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டு அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

பயிற்சியில் வேளாண்மைத் துறை விரிவாக்க அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை புதுக்கோட்டை வேளாண்மை அலுவலர் சிவகாமி, துணை வேளாண்மை அலுவலர் பழனிச்சாமி ஆகியேர் செய்து இருந்தனர்.

## கூடலூர் பகுதியில் திடீர் மழையால் மாந்தோப்புகளில் பூக்கள் உதிர்வதால் மகசூல் பாதிப்பு விவசாயிகள் கவலை

கூடலூர்

கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த திடீர் மழையால் கூடலூர் பகுதியில் மாமரங்களில் பூக்கள் உதிர தொடங்கி உள்ளதால் மகசூல் பாதிக் கப் பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**பூக்கள் உதிர்ந்தன**

தேனி மாவட்டம், கூடலூர் நகரம் மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந் துள்ளது. இந்த பகுதிகளில் உள்ள காக்கான் ஓடை, தம் மணம்பட்டி, பகவதி யம்மன் கோவில் பிரிவு, பெருமாள் கோவில் புலம், பளியன்குடி உள்பட பல்வேறு பகுதிகளில் மா மரங்கள் அதிகளவில் உள்ளன.

இந்த பகுதிகளில் காசா, கல்லாமை, மல்கோவா, செந்தூரம் உள்பட பல்வேறு வகை மாங் காய்கள் அதிகள வில் காய்க்கும்.

மா மரங்கள் ஜனவரி மாதங் களில் பூத்துக்குலுங்க தொடங்கி விடும். ஏப்ரல் மாதத் தில் மாங்காய்கள், மாம் பழங்கள் விளைச்சல் அடைந்து சந்தைக்கு விற் பனைக்கு வரும். தற்போது கூடலுர் பகுதியில் உள்ள பெரும்பாலான மா மரங்களில் பூக்கள் பூத்து இருந்தன. ஒரு சில மரங்களில் பிஞ்சு பிடித்தும் இருந்தன.

**விவசாயிகள் கவலை**

இந்நிலையில் சமீபத்தில் பெய்த திடீர் மழை எதிரொலி யாக மா மரங்களில் பூக்கள் உதிரத்தொடங்கி விட்டன. இதனால் மரத்தின் கிளைகளில் ஒரு சில பிஞ்சுகள் மட்டுமே தங்கி உள்ளது. இதனால் விவசாயிகள் எதிர்பார்த்த அளவில் மகசூல் கிடைக்க வாய்ப்பு இல்லை.

இதன் காரணமாக கூடலூர் பகுதி மா விவசாயிகள் கவலைஅடைந்துள்ளனர். மீதமுள்ள பூக்களும் உதிராமல் இருக்க விவசாயிகள் மாமரங் களுக்கு மருந்து அடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு ரூ.19 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் அமைச்சர்கள் வழங்கினர்

பரமக்குடி

வேளாண் துறை சார் பில் விவசாயிகளுக்கு ரூ.19 லட்சம் மதிப் பிலான நலத்திட்ட உதவிகளை அமைச் சர்கள் வழங்கினர்.

**நலத்திட்ட உதவிகள்**

பரமக்குடி சட்டமன்ற அலு வலகத்தில் பயனாளி களுக்கு நலத்திட்ட உதவி கள் வழங்கும் நிகழ்ச்சி நடை பெற்றது. நிகழ்ச்சியில் அமைச்சர்கள் செல்லூர் ராஜு, சுந்தர்ராஜன் ஆகி யோர் வேளாண் பொறி யியல் துறை சார்பில் ஒரு பயனாளிக்கு ரூ.15½ லட் சம் மதிப்பிலான கதிர் அறு வடை இயந்திரத்தையும், மற் றொரு பயனாளிக்கு ரூ.1½ லட்சம் மதிப்புள்ள பவர் டில்லர் இயந்திரத்தையும், 5 பயனாளிகளுக்கு பேட்டரி ஸ்பிரேயரையும், 2 பேருக்கு ரோட்டவேட்டரையும் வழங் கினர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் அன்வர்ராஜா, மாவட்ட ஊராட்சி தலை வர் சுந்தரபாண்டியன், அ.தி.மு.க. மாவட்ட செய லாளர் ஆனி முத்து, முருகன் எம்.எல்.ஏ., பரமக்குடி நகரசபை தலைவர் கீர்த் திகா முனியசாமி, ஆர். எஸ்.மங்கலம் யூனியன் தலைவர் ஆனந்த், செயற் பொறியாளர் யுவராஜ், உதவி செயற்பொறியாளர் ராமன், மாவட்ட கல்வி அலுவலர் குணசேகரன், புதுவாழ்வு திட்ட அலுவலர் ஜோசப் ஆனந்தராஜ், மாற் றுத்திறனாளிகள் நல அலு வலர் ராம கிருஷ்ணன், மற் றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: சீனி, கடலை எண்ணை விலை மேலும் குறைவு வத்தல் விலை உயர்வு விருதுநகர்

விருதுநகர்

விருதுநகர் மார்க்கெட் டில் சீனி, கடலை எண்ணை ஆகியவற்றின் விலை மேலும் குறைந்து உள்ள நிலையில் வரத்துக் குறைவு காரணமாக வத்தல் விலை உயர்ந்து உள்ளது.

**உளுந்து**

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடை ரூ.3,300 முதல் ரூ.3,800 வரை விற்பனை செய்யப்பட்டது. உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.4,400 முதல் ரூ.5,500வரை யிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.4,000 முதல் ரூ.4,200 வரையிலும் விற்பனை செய் யப்பட்டது. துவரை 100 கிலோ மூடை ரூ.3,200முதல் ரூ.4,200 வரையிலும், துவரம் பருப்பு ரூ.4,600 முதல் ரூ.5,900 வரையிலும் விலை இருந்தது. பாசிப்பயறு ரூ.5,600 முதல் ரூ.6,000 வரையிலும், பாசிப் பருப்பு ரூ.7,600 முதல் ரூ.8,000 வரையிலும் விலை சொல்லப் பட்டது. விருதுநகர் மல்லி மார்க்கெட்டில் மல்லி நாடு ரகம் 40 கிலோ ரூ.3,600 முதல் ரூ.4,000 வரையிலும், மல்லி லயன் ரகம் ரூ.3,000 முதல் ரூ.3,400 வரையிலும் விற்பனை ஆனது. வரத்துக் குறைவு காரணமாக வத்தல் விலை குவிண்டாலுக்கு ரூ.700 வரை உயர்ந்து சம்பா ரகம் குவிண்டால் ரூ.6,800 முதல் ரூ.7,100 வரையிலும், ஏசி வத்தல் ரூ.8,000 முதல் ரூ.8,300 வரையிலும், சோடை வத்தல் ரூ.1700 முதல் ரூ.2200 வரையிலும் விலை இருந் தது.

**சமையல் எண்ணை**

விருதுநகர் எண்ணை மார்க் கெட்டில் கடலை எண்ணை 15 கிலோவுக்கு ரூ.60 விலை குறைந்து ரூ.1,900 ஆகவும், பாமாயில் 15 கிலோ ரூ.830 ஆக வும், நல்லெண்ணை 15 கிலோ ரூ.4150 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,578 ஆகவும், சூரியகாந்தி எண்ணை ரூ.1,410 ஆகவும், நிலக்கடலை பருப்பு 80 கிலோவுக்கு ரூ.200 விலை குறைந்து ரூ.5,400 ஆகவும், கடலை

புண்ணாக்கு 100 கிலோ ரூ.3,950 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.1,960 ஆகவும் விற்பனை ஆனது. விருதுநகர் சீனி மார்க் கெட்டில் சீனி குவிண்டா லுக்கு ரூ.10 விலை குறைந்து ரூ.3,185 ஆகவும், கொண்டைக் கடலை குவிண்டால் ரூ.3,900 ஆகவும், பொரி கடலை 55 கிலோ ரூ.3,010 ஆகவும், பட் டாணி 100 கிலோ ரூ.2,900 முதல் ரூ.3000 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. பட்டாணி பருப்பு ரூ.3,100 முதல் ரூ.3,400 ஆகவும், மசூர் பருப்பு ரூ.4,000 முதல் ரூ.4,100 வரையிலும், மைதா 90 கிலோவுக்கு ரூ.2,970 ஆக வும், ரவை 90 கிலோ ரூ.3,090 ஆகவும் விற்பனை ஆனது.

**காபி**

விருதுநகர் காபி மார்க்கெட் டில் காபி பிளாண்டேசன் ‘பிபி’ ரகம் 50 கிலோ ரூ.10,250 ஆகவும், ‘ஏ’ரகம்ரூ.10,500ஆகவும்,‘சி’ ரகம் ரூ.9,650 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.7,000 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.6,750ஆகவும் விற்பனையானது.

## வறட்சியால் பயிர்கள் பாதிப்பு: விவசாயிகளுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும் கலெக்டர் முனுசாமி தகவல்

நாகப்பட்டினம்

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும் கலெக்டர் முனுசாமி கூறினார்.

நாகை கலெக்டர் முனுசாமி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறி இருப்பதாவது:–

முதல்–அமைச்சர் அறிவிப்பு

காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு சலுகைகளை முதல்–அமைச்சர் அறிவித்துள்ளார். நாகை மாவட்டத்தில் கடந்த ஆண்டு போதிய பருவ மழை பெய்யாததாலும், இடர்பாட்டு பங்கீட்டு முறைப்படி கர்நாடகம் நீர் திறந்து விடாததன் காரணமாகவும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததன் காரணமாகவும் நாகை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அரசு அறிவித்தது.

நாகை மாவட்டத்தில் சம்பா–தாளடி இயல்பான பரப்பான 3 லட்சத்து 30 ஆயிரத்து 31 ஏக்கரில் வறட்சி காரணமாக இந்த ஆண்டு 3 லட்சத்து 24 ஆயிரத்து 178 ஏக்கர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. இதில் 50 சதவீதத்திற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள 1 லட்சத்து 81 ஆயிரத்து 794

ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15 ஆயிரம் என்ற விகிதத்தில் நிவாரணத்தொகை வழங்கப்படும் என முதல்–அமைச்சர் அறிவித்தார்.

ரூ.272 கோடி

இதற்கென நாகை மாவட்டத்திற்கு ரூ. 272.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிவாரண தொகையை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு போர்க்கால அடிப்படையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிவாரணம் வழங்க உள்ள விவசாயிகளின் பட்டியல் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களால் போர்க்கால அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்திற்கு முதல்–அமைச்சர் அறிவித்த வறட்சி நிவாரணம் கும்பகோணம மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், பயிர் காப்பீடு கணக்கு பராமரிக்கும் ஒருங்கிணைப்பு கிளைகளுக்கும் வழங்கப்படும். இந்த தொகையை அந்த வங்கிகளால் சம்பந்தப்பட்ட வங்கிகள் பயன்பெற தகுதி என கண்டறியப்பட்டு விவசாயிகளின் வங்கி கணக்கில் மின்னணு பணம் பரிமாற்றம் மூலம் இத்தொகை வழங்கப்படும். இந்த நிவாரணத்தொகை ஏற்கனவே விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடன் நிலுவைத்தொகையில் சரிசெய்யப்படமாட்டாது.

போர்க்கால அடிப்படையில்...

நாகை மாவட்ட பாசன பகுதிகளில் 50 சதவீதத்திற்கும் குறைவாக நெல் பயிர் இழப்பீடு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு அந்தந்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள சராசரி பயிர் இழப்புக்கு ஏற்ப காப்பீடு நிறுவனம் மூலம் நிவாரணம் வழங்கப்படும். பயிர் காப்பீட்டு திட்டத்தில் விரைவாக நிவாரணம் வழங்கும் பொருட்டு பயிர் அறுவடை சோதனை மதிப்பை விரைவாக செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாகை மாவட்ட விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு முதல்–அமைச்சர் அறிவித்த நிவாரணம் போர்க்கால அடிப்படையில் வழங்கப்படும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.140 கோடி வறட்சி நிவாரண நிதி கலெக்டர் நடராசன் தகவல்

திருவாரூர்

திருவாரூர் மாவட்ட விவ சாயிகளுக்கு ரூ.140 கோடி வறட்சி நிவாரணமாக வழங்கப்பட உள்ளதாக கலெக்டர் சி.நடராசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட் டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:

**ரூ.140 கோடி நிவாரண நிதி**

முதல்அமைச்சர் ஜெய லலிதாவின் உத்தரவுப்படி, திருவாரூர் மாவட்டத்தில் வறட்சியால் 50 சதவீதத்திற்கு மேலாக பாதிப்படைந்துள்ள 93,611 ஏக்கர் பரப்புக்கு நிவா ரண தொகையாக பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ஏக்கருக்கு ரூ. 5 ஆயிரம் வீத மும், பயிர் காப்பீட்டு நிவா ரண தொகையை எதிர் நோக்கி முன்பணமாக ரூ.10 ஆயிரமும் ஆக கூடுதல் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதம் வழங்கப்பட உள்ளது.

திருவாரூர் தாலுகாவிற்கு 7,669 ஏக்கருக்கு ரூ.11.5 கோடி யும், நன்னிலம் தாலுகாவிற்கு 8,675 ஏக்கருக்கு ரூ.13.01 கோடி யும், குடவாசல் தாலுகாவிற்கு 12,689 ஏக்கருக்கு ரூ.19.03 கோடியும், வலங்கைமான் தாலுகாவிற்கு 6,965 ஏக்கருக்கு ரூ.10.45 கோடியும், மன்னார் குடி தாலுகாவிற்கு 18,864 ஏக்கருக்கு ரூ.28.3 கோடியும், நீடாமங்கலம் தாலுகாவிற்கு 5,404 ஏக்கருக்கு ரூ.8.11 கோடி யும், திருத்துறைப்பூண்டி தாலு காவிற்கு 33,345 ஏக்கருக்கு ரூ.50.01 கோடியும் ஆக மொத் தம் ரூ.140.42 கோடி நிவாரணம் 1 லட்சத்து 36 ஆயிரத்து 718 விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

**வங்கிக் கணக்குகளில்...**

விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிவார ணத் தொகை கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தஞ்சை மத்திய கூட்டுறவு வங் கிகளுக்கு காசோலை மூலம் வழங்கப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங் கங்களுக்கு பகிர்ந்து அளிக்கப் பட்டு இந்த தொகை பாதிக் கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் உடனடி யாக வரவு வைத்து விவசாயி களுக்கு வழங்கப்பட உள் ளது.

பயிர் பாதிப்பு காரணமாக வழங்கப்படும் நிவாரண தொகை பாதிப்படைந்துள்ள விவசாயிகள் பயிர் காப்பீடு செய்துள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங் கங்கள் அல்லது வணிக வங்கி களின் மூலும் வழங்கப்படும்.

நிவாரண தொகை பெறும் முன்பு, நிவாரண தொகை பெறும் விவசாயிகள் சம்மந்தப் பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் வழங்கப் படும் உறுதிமொழி பத்திரத்தை பெற்று அதில் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படத்தை ஒட்டி பூர்த்தி செய்து கையெ ழுத்திட்டு

சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட் டுறவு சங்கத்திலோ அல்லது வணிக வங்கியிலோ 3 நகல் களை ஒப்படைத்து நிவாரண தொகையை பெற்றுக் கொள்ள லாம்.

இவ்வாறு அந்த அறிக்கை யில் கூறப்பட்டு இருந்தது.

## காவிரி பாசன விவசாயிகளின் உரிமையை மீட்ட முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி விவசாயிகள் மன்ற கூட்டத்தில் தீர்மானம்

மன்னார்குடி

காவிரி பாசன விவ சாயிகளின் உரி மையை மீட்டெடுத்த முதல்அமைச்சர் ஜெய லலிதாவுக்கு திருவாரூர் மாவட்ட விவசாயிகள் மன்ற கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**நிர்வாகிகள் கூட்டம்**

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் மன்ற நிர்வாகிகள் கூட்டம் எஸ்.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. நிர்வாக குழு உறுப்பினர்கள் சுந்தரம், மருதமுத்து, தசரதன், வரதராஜன், பாலசுப்பிரமணி யன், சிவஞானம், சாம்பசிவம், சரவணன் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

காவிரி நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை மத்திய அரசு கெசட்டில் வெளியிடாமல் காலம் தாழ்த்தி வந்தது.

**பாராட்டு**

தமிழக விவசாயிகள் மற்றும் அரசியல் கட்சியினர் பல போராட்டங்களை நடத்தியும் அரசிதழில் வெளியிட வேண் டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு கண்டு கொள்ளா மல் உதாசீனப் படுத்தி வந்தது. இந்நிலையில் முதல் அமைச் சர் ஜெயலலிதா உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந் தார். உச்சநீதி மன் றம் வழக்கை விசாரித்து காவிரி நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை அரசிதழில் வெளியிட உத்தரவிட்டது. இதன்மூலம் விவசாயிகளின் உரிமை மீட்கப்பட்டுள்ளது.

இதற்கு பெரும் முயற்சி எடுத்த முதல்அமைச்சர் ஜெயலலிதாவுக்கு இக்கூட்டம் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## விவசாயிகளின் பயிர் கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் அரசுக்கு கோரிக்கை

மீன்சுருட்டி

விவசாயிகளின் பயிர் கடன்களை முழுமை யாக ரத்து செய்ய வேண் டும் என்று அரசுக்கு கோரிக்கை விடப்பட் டுள்ளது.

**கோரிக்கை மனு**

இது தொடர்பாக அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டி அருகேயுள்ள மண்டபதேரி கிராமத்தை சேர்ந்த சீனி வாசன், இளைய பெருமா நல்லூர் கிராமத்தை சேர்ந்த கல்யர்ணசுந்தரம், ரெட்டி பாளையம் கிராமத்தை சேர்ந்த மதிவாணன் ஆகிய விவசாயி கள் உள்பட பல்வேறு விவ சாயிகள் அரசுக்கு அனுப்பி யுள்ள ஒரு கோரிக்கை மனுவில் கூறி இருப்பதாவது:

**வறட்சி பகுதி**

அரியலூர் மாவட்டம் மீன் சுருட்டி பகுதியை சுற்றி யுள்ள குருவாலப்பர் கோயில், உட்கோட்டை, கங்கை கொண்ட சோழபுரம் ,இளைய பெருமாள்நல்லூர், முத்து சேர்வாமடம், குண்டவெளி ஆகிய பகுதிகளையும் இந்த பகுதியை சுற்றியுள்ள கடலூர் மாவட்டம் காட்டு மன்னார் குடி பகுதியுடன் சேர்த்து வறட்சி காலங்களிலும் மழை காலங்களிலும் அதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதி யாக இந்த பகுதிகள் இருந்து வருகின்றன.

இந்த பகுதிகளை காட்டு மன்னாகுடியுடன் சேர்க்க வேண்டும். மழை காலங்களில் அரியலூர் மாவட்டத்தின் கடைநிலை பகுதி என்பதால் வெள்ளம் வந்தாலும் வறட்சி ஏற்பட்டா லும் மிகப்பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதியாகவே இருந்து வருகிறது.

**ரத்து செய்ய வேண்டும்**

அரியலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும் மின்சார பற்றாக்குறையாலும் விவசாயம் என்பது முற்றிலும் செய்ய முடியாத சூழல் ஏற்பட்டது. இந்த நிலையில் கூட்டுறவு சங்கங்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு நடப்பாண்டில் வழங்கப்பட்ட பயிர் கடன்களை மட்டும் முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும். மேலும் ஏக்கர் 1 க்கு 25 ஆயிரம் இழப்பீடு தொகை வழங்க வேண்டும். பயிர் செய்ய முடியாத தரிசு நிலங்களுக்கு 15 ஆயிரம் வழங்க வேண்டும். வானிலை பயிர் பாதுகாப்பீடு திட்டத்தின் மூலம்

ஏக்கர் 1க்கு 15 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் .விவசாயிகளின் கண்ணீரை துடைத்திட அரியலூர் மாவட்ட கலெக்டர் மூலமாக கேட்டு கொள்கிறோம்.

மேலும் இந்த பகுதியில் தினமும் 15 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். ஆனால் 6 மணி நேரமே வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து 6 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் இருந்து வருகிறது மின்சாரம் கூடுதலாக வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.